# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.32/2024** **நாள் : 15.03.2024**

ரூ.69.57 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-196, கண்ணகி நகர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் பிரதான குழாய்கள் மாற்றி அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.69.57 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-196, கண்ணகி நகர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் பிரதான குழாய்கள் மாற்றி அமைக்கும் பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், கண்ணகி நகர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு 18.54 கி.மீ நீளத்திற்கு 100 மி.மீ முதல் 400 மி.மீ விட்டமுடைய குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் 0.7 கி.மீ நீளத்திற்கு 400 மி.மீ விட்டமுடைய பிரதான குழாய் பதிக்கும் பணிகள் உடனடியாக தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 38 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 15,656 ண்ணிக்கையிலான 300 லிட்டர் கொள்ளளவு கொண்ட உயர் அடர்த்தி பாலி எத்திலீன் (HDPE) தொட்டிகள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 6 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் இத்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, கண்ணகி நகர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் 1 இலட்சம் பொதுமக்கள் பயன் பெறுவர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater